07.05.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### அரிசி விலை உயரும் அபாயம்: கிலோ ரூ.60 வரை உயர வாய்ப்பு

கடும் வறட்சி காரணமாக தரமான அரிசி கிலோ ரூ.60 வரை உயர வாய்ப்புள்ளதாக அரிசி வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து ஆயக்குடி அரிசி வியாபாரி முத்து கூறியதாவது: எந்த ஆண்டிலும் இல்லாத வகையில் இந்த ஆண்டு குஜராத், கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பல மாநிலங்களில் வறட்சியின் காரணமாக நெல் சாகுபடி சரிவர நடைபெறவில்லை. பல பகுதிகளில் சேமித்து வைத்த நெல்லையே அரிசியாக மாற்றி விற்பனை செய்து வருகின்றனர். நெல் மட்டுமல்லாமல் பல்வேறு உணவு தானியங்களின் விலையும் அதிகரித்து வருகிறது. தற்போது, தரமான அரிசி கிலோ ரூ.54, ரூ.58 என விற்கும் நிலையில் ரூ.60 வரை விலை உயரும் என்றார்.

அதே போல புளி கிலோ ரூ.100-க்கும், முதல் தரமான துவரம் பருப்பு ரூ.160-க்கும், பாசிப் பருப்பு ரூ.115-க்கும், உளுந்தம் பருப்பு ரூ.180 வரை விற்கப்படுகிறது. கடலை உற்பத்தியும் குறைந்துள்ளதால் கடலை எண்ணெய் டின் ரூ.2,500 வரையிலும் விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் பொடி, மிளகாய் பொடி மற்றும் மல்லித்தூள் போன்றவை 100 கிராம் ரூ.20இல் இருந்து ரூ.23 வரை விற்பனையாகிறது. கொடைக்கானலில் இருந்து வரும் மலைப்பூண்டு ரூ.300 வரையிலும் விற்கப்படுகிறது. மிளகாய் வத்தல் அளவு மற்றும் தரத்தை பொறுத்து கிலோ ரூ.150 முதல் ரூ.180 வரையிலும், வெந்தயம் மற்றும் கடுகு கிலோ ரூ.90இல்

இருந்து ரூ.100 வரையிலும் விற்கப்படுகிறது. மண்டை வெல்லம் கிலோ ரூ.60 க்கு விற்கப்படுகிறது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**தாராபுரம் உழவர் சந்தையில் ரூ. 1 கோடிக்கு காய்கறி விற்பனை**

தாராபுரம் உழவர் சந்தையில் கடந்த ஏப்ரல் மாதம் ரூ. 1 கோடியே 11 லட்சம் மதிப்பிலான காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இதுகுறித்து சந்தை நிர்வாகம் சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தாராபுரம் உழவர் சந்தைக்கு தாராபுரம், குண்டடம், மூலனூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வருகின்றனர். இதன்படி கடந்த ஏப்ரல் மாதம் 5 லட்சத்து 5 ஆயிரத்து 265 கிலோ காய்கறிகளை 3 ஆயிரத்து 887 விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதனை 72 ஆயிரத்து 130 நுகர்வோர்கள் வாங்கி பயன் பெற்றனர். இதன் மதிப்பு ரூ. 1 கோடியே 11 லட்சத்து 42 ஆயிரம் ஆகும்.

**உதகையில் பலத்த மழை**

உதகையில் வெள்ளிக்கிழமை பகலில் தொடர்ந்து 3 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

உதகையில் கடந்த இரு வாரங்களாக தினந்தோறும் பகலில் மழை பெய்து வருகிறது. இந்நிலையில், வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு தொடங்கிய மழை 2 மணி வரை நீடித்தது. அதைத்தொடர்ந்து, சுமார் அரை மணி நேர இடைவெளியில் மீண்டும் 3 மணிக்குத் தொடங்கிய மழை 4.30 மணி வரை நீடித்தது. இதனால், உதகையில் இதமான காலநிலை நிலவுகிறது.

இதனிடையே, உதகை தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் ஆர்.கணேஷுக்கு ஆதரவாக காங்கிரஸ் மேலிடப் பார்வையாளர் முகுல் வாஸ்னிக் பிரசாரம் செய்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, பிரசாரத்திற்காக முகுல் வாஸ்னிக் வந்தபோது மழை பெய்து கொண்டிருந்ததால், மீண்டும் மதியம் 3 மணிக்கு வந்தார். ஆனால், அப்போதும்

மழை தொடர்ந்ததால் உதகையில் மத்தியப் பேருந்து நிலையப் பகுதியிலிருந்த ராஜீவ் காந்தியின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, பிரசாரம் செய்ய முடியாமல் திரும்பிச் சென்றார்.

**நாமக்கல்லில் திடீர் மழை**

நாமக்கல் நகரில் வெயில் கொளுத்தி வந்த நிலையில் திடீரென வெள்ளிக்கிழமை இரவு மழை பெய்ததால் வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டது. இதனால் பொதுமக்கள் நிம்மதி பெருமூச்சுவிட்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் கடந்த இரண்டு மாதங்களாக கோடை வெயில் கொளுத்தி வருகிறது. குறிப்பாக கடந்த ஒரு மாதமாக வெயில் அவ்வப்போது சதமடித்து வருகிறது. இதனால் பகலில் மட்டுமன்றி இரவிலும் புழுக்கத்தால் மக்கள் தவித்து வந்தனர். இந்தநிலையில், வெள்ளிக்கிழமை மாலை மேக மூட்டமாக காணப்பட்டது. பிறகு இரவு 8.30 மணிக்கு தொடங்கி இடி, மின்னல், காற்றுடன் சுமார் 30 நிமிடம் மிதமான மழை பெய்தது.

ராசிபுரத்தில்...: அதேபோல, ராசிபுரம், அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலும் வெள்ளிக்கிழமை திடீர் மழை பெய்தது. ராசிபுரம் நகரப் பகுதியில் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதியில் மழைநீர் தேங்கி நின்றது.

கடந்த 4ஆம் தேதி முதல் கத்தரி வெயில் தொடங்கிய நிலையில், கோடை வெயில் உச்சநிலையை அடைந்துள்ளது. நிகழாண்டு தமிழகத்தில் அதிகபட்சமாக 110 டிகிரியை கடந்து வெப்பம் பதிவாக வாய்ப்பு உள்ளதாக, ஏற்கனவே வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. கத்தரி வெயிலை நினைத்து மக்கள் அச்சத்தில் இருந்த நிலையில் இந்த திடீர் மழை நாமக்கல் நகர மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

## வானிலை மாற்றம்: முட்டை சார்ந்த பிரச்னைகள் குறைய வாய்ப்பு

வானிலை மாற்றம் காரணமாக முட்டை சார்ந்த பிரச்னைகள் குறைய வாய்ப்புள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்தி: அடுத்த நான்கு நாள்களுக்கு வானம் அவ்வப்போது மேகமூட்டத்துடன் காணப்படும், மழைக்கான வாய்ப்புள்ளது. இதனால் வெப்ப அயற்சியும், வெப்ப அதிர்ச்சியும் சற்றே குறையும். இக்காலகட்டத்தில் குடிக்கும் தண்ணீரின் அளவு மற்றும் தீவன எடுப்பு சற்றே உயர்ந்து, முட்டை சார்ந்த பிரச்னைகள் குறையலாம், கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல்மூச்சுக்குழாய் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. இதனால் பண்ணையாளர்கள் தகுந்த உயிர்ப் பாதுகாப்பு முறைகள் மற்றும் வெப்ப அயற்சியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்த கோடைகாலப் பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதோடு, தெளிப்பான்களைப் பயன்படுத்த வேண்டும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## இந்தியாவின் பேரீச்சம்பழம்

'டாமரிண்ட்' என்ற ஆங்கில வார்த்தை புளியைக் குறிக்கும். ஆங்கிலேயர்கள் இந்த வார்த்தையை ஈரான் நாட்டில் இருந்து பாரசீக மொழியில் இருந்து எடுத்துக்கொண்டனர். பாரசீக மொழியில் தமர், அல்லது தமார் என்பது பேரீச்சம்பழத்தைக் குறிக்கும். 'ஹிந்த்' என்பது இந்தியாவைக் குறிக்கும் ெசொல். நேதாஜி 'இந்தியா வெல்க' என்ற பொருளில் 'ஜெய்ஹிந்த்' என்றார். தமாரும், ஹிந்த் என்ற வார்த்தையும் இணைந்து தாமரிண்ட், டாமரிண்ட் என்ற வார்த்தைகள்

உருவாயின. இதன் பொருள் 'இந்தியாவின் பேரீச்சம்பழம்' என்பதாகும். இந்தியர்கள் புளியம்பழத்தை பேரீச்சம்பழம் என்று எண்ணுகிறார்கள் என்பது இதன் அர்த்தம்.

## வேடசந்தூரில் நல்ல மழை

வேடசந்துார்: வேடசந்துார் பகுதியில் நேற்று மாலை பெய்த கன மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

தமிழகத்தில் பங்குனி, சித்திரை மாதங்களில் ஒவ்வொரு ஆண்டும் கடும் வறட்சி நிலவும். அதேபோல் நடப்பு ஆண்டிலும் கடுமையான வறட்சி மற்றும் அக்னிநட்சத்திர வெயிலால் மக்கள் அவதிப்பட்டு வந்தனர். இந்நிலையில் நேற்று மாலை வேடசந்துார், தம்மனம்பட்டி, நால்ரோடு உள்ளிட்ட பகுதிகளில் மாலை 7 முதல் 7.30 வரையும், பிறகு 7.50 முதல் 9 மணி வரையும் இடியுடன் கூடிய மழை பெய்தது. இதனால் ரோடுகளில் தண்ணீர் ஆறாக ஓடியது.

வேடசந்துார் அருகே தம்மனம்பட்டியில் கே.எஸ்.சுப்பிரமணி என்பவரின் தென்னந்தோப்பில் இடிவிழுந்தது. இதில் ஒரு தென்னை மரம் தீப்பிடித்து எரிந்தது. திண்டுக்கல்லில் நேற்று இரவு 8 மணி அளவில் லேசான மழை பெய்தது.

## தடியன்குடிசையில் லேசான மழை

தாண்டிக்குடி: தடியன்குடிசை நறுமண சுற்றுலா தலத்தில் இருபது நிமிடம் கனமழை பெய்தது.

தொடர்ந்து கடந்த ஐந்து மாதங்களாக வறண்ட வானிலை, சுட்டெரிக்கும் வெயில் நீட்டித்து வறட்சியின் பிடியில் மலைப்பகுதிகள் சிக்கின.

நேற்று முன்தினம் இரவு இடி, மின்னலுடன் 20 நிமிடம் கனமழை பெய்தது. பண்ணைக்காடு, பெரும்பாறை பகுதியில் லேசான சாரல் நீட்டித்தது. கோடையில் சற்று நேரம் பெய்த மழை விவசாயிகளுக்கு ஆறுதலை அளிக்காவிட்டாலும், வெப்பத்தில் இருந்து மீளும் வகையில் குளிர்ச்சி நிலவியது. நேற்று முழுவதும்

வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. வெயில் முகம் பாராத பொதுமக்கள் நிம்மதியடைந்தனர்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு: மே 17ம் தேதி பயிற்சி

கரூர்: கால்நடை பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில், வரும், 17ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி நடக்கிறது.

இதுகுறித்து, கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் வசந்த்குமார் வெளியிட்ட அறிக்கை: வரும், 17ம் தேதி நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி நடக்கிறது. பயிற்சியில் கோழி வளர்ப்பு முறைகள், கொட்டகை அமைப்பு, தீவன பராமரிப்பு, நாட்டுக்கோழிகளை தாக்கும் நோய்கள் மற்றும் அவற்றை தடுக்கும் முறைகள், மரபுசார் மருத்துவ முறைகள், குடற்புழு நீக்கம், தடுப்பூசி போடுதல், விற்பனை உத்திகள் மற்றும் பண்ணை பொருளாதாரம் குறித்த தலைப்புகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. காலை, 10.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வர வேண்டும். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## 2,600 டன் கடுகு புண்ணாக்கு நாமக்கல் டவுனுக்கு வருகை

நாமக்கல்: ராஜஸ்தான் மாநிலக்கில் இருந்து வந்த, 2,600 டன் கடுகு புண்ணாக்கு, சம்பந்தப்பட்ட ஆலைக்கு அரவைக்காக கொண்டு சென்று இருப்பு வைக்கப்பட்டது. சேலம் - கரூர் ரயில் போக்குவரத்து துவங்கியதை தொடர்ந்து கர்நாடகா, ஆந்திரா, ராஜஸ்தான், பீஹார், சட்டீஸ்கர் போன்ற பல்வேறு மாநிலங்களில் இருந்து அரிசி, கோதுமை, நாட்டு சர்க்கரை நாமக்கல் ரயில்வே ஸ்டேஷன் வந்தடைகிறது. அதன்படி, நேற்று, ராஜஸ்தான் மாநிலம் கோட்டாவில் இருந்து, ஏழு கோடி ரூபாய் மதிப்புள்ள, கடுகு புண்ணாக்கு, 2,600 டன் சரக்கு ரயிலில், நாமக்கல் ஸ்டேஷன் வந்தடைந்தது. அவை லாரிகள் மூலம் எடுத்து செல்லப்பட்டு, சம்பந்தப்பட்ட ஆலைகளுக்கு அரவைக்காக கொண்டு சென்று இருப்பு வைக்கப்பட்டது.

**கன மழையால் குளிர்ந்தது தர்மபுரி**

தர்மபுரி: தர்மபுரியில் நேற்று மாலை, பெய்த திடீர் மழையால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். தர்மபுரி மாவட்டத்தில் கடந்த பிப்., முதல் வெயில் கொளுத்தி வந்த நிலையில், மார்ச், ஏப்., மாதத்தில் பெரும்பாலான நாட்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்ததால் பொதுமக்கள் அவதியடைந்து வந்தனர். குறிப்பாக, தர்மபுரி மாவட்டத்தில் கடந்த, 20 நாட்களில் வெயிலின் அளவு அதிகபட்சமாக, 107 டிகிரி பாரன்ஹீட்டாக இருந்தது. இதனால், நீர் நிலைகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்தது. நேற்று முன்தினம் இரவு, பலத்த காற்றுக்கு மத்தியில் ஒகேனக்கலில் மட்டும் மழை பெய்ததுடன், 1.60 மி.மீ., மழையளவு பதிவானது. நேற்று காலை முதல், வெயில் வாட்டி வந்த போதும், மாலை, 4 மணிக்கு தர்மபுரி, ஒட்டப்பட்டி, இண்டூர் உட்பட பல்வேறு பகுதிகளில் மழை பெய்ய துவங்கியது. சாரல் மழையாக துவங்கி, சற்று வழுவான மழை அவ்வப்போது விட்டு விட்டு, 30 நிமிடங்கள் வரை பெய்தது. இதனால், குளுமையான சீதோஷன நிலை ஏற்பட்டதால் மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும், கடந்தாண்டு போல் இந்தாண்டும் கோடை மழை அதிகரிக்கும் என, விவசாயிகள் நம்பிக்கையில் உள்ளனர்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**கோபி பகுதி விவசாயிகளுக்காக 9 இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு**

கோபி, : கோபி மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் தடப்பள்ளி மற்றும் அரக்கன்கோட்டை பாசனத்தில் தற்போது நெல் அறுவடை தொடங்கி உள்ளது. இதனால் விவசாயிகளிடம் இருந்து அரசு நேரிடையாக நெல் கொள்முதல் செய்வதற்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தின் சார்பில், கோபி அருகே

உள்ள புதுக்கரைப்புதூர், கூகலூர், நஞ்சகவுண்டன்பாளையம், அத்தாணி, கள்ளிப்பட்டி, புதுவள்ளியாம்பாளையம், டி.என்.பாளையம், காசிபாளையம், ஏளூர் ஆகிய 9 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த கொள்முதல் மையங்களில் சன்னரகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆதார விலையாக ரூ.1,450ம், ஊக்கத்தொகையாக ரூ.70 என மொத்தம் ரூ.1520ம், சாதா ரக நெல்லிற்கு குவிண்டால் ஒன்றுக்கு ஆதாரவிலையாக ரூ.1410ம், ஊக்கத்தொகையாக ரூ.50 என மொத்தம் ரூ.1460 வழங்கப்படுகிறது. கொள்முதல் மையத்திற்கு நெல்லை விற்பனைக்கு கொண்டு வரப்படும் விவசாயிகளின் நெல், அவற்றின் ஈரப்பதம் 17 சதவீதத்திற்கு குறைவாக உள்ளதா? என்று சோதனை செய்யப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டு, எடை போடப்படுகிறது. பின்னர் நெல்லிற்கான உரிய தொகை, விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

தற்போது வெளி மார்க்கெட்டை விட அரசு கொள்முதல் மையங்களில் அதிக விலை கிடைப்பதால் அரசு நெல் கொள்முதல் மையங்களுக்கு விவசாயிகள் தங்கள் நெல்லை கொண்டு வந்து அதிக அளவில் விற்பனை செய்து வருகின்றனர்.

## மூணாறில் கொட்டுது கோடைமழை விவசாயிகள் மகிழ்ச்சி

மூணாறு, : கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் உள்ள மூணாறு, மாட்டுப்பட்டி, வட்டவடை மற்றும் காந்தலூர் பஞ்சாயத்துக்கு உட்பட்ட பலநூறு ஏக்கரில் காரட், முட்டைக்கோஸ், பீன்ஸ் வகைகள், வெள்ளைப்பூண்டு, உருளைக்கிழங்கு, காலிபிளவர் போன்ற காய்கறி வகைகள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் இப்பகுதிகளில் விவசாயப்பணி தொடங்கும். மே மாதத்தில் விளைபொருட்கள் அறுவடை செய்யப்பட்டு சந்தைக்கு எடுத்துச் செல்லப்படும்.

ஆனால், இந்தாண்டு பிப்ரவரி மாதம் நிலவிய கடும் வறட்சியினால் விவசாயப்பணி தொடங்கப்படவில்லை. இந்நிலையில், மூணாறு பகுதியில் கடந்த சில நாட்களாக கோடை மழை கொட்டி வருகிறது. இதனால், இப்பகுதியில் வாழும் விவசாயிகள் தங்களது விவசாயப் பணிகளை தொடங்கியுள்ளனர். தினமும் மழை பெய்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மழையால் மூணாறு பகுதியில் நிலவிய வெப்பம் குறைந்து இதமான சீதோஷ்ண நிலை நிலவுகிறது. இதனால், மூணாறுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து உள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

## சென்னையில் திடீரென வெப்பம் தணிந்தது தமிழகத்தின் பல இடங்களில் மழை கொட்டியது



சென்னை,

சென்னையில் நேற்று திடீரென்று வெப்பம் தணிந்தது. மேலும், தமிழகத்தின் பல இடங்களில் மழை கொட்டியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெப்பம் தணிந்தது

தமிழகத்தில் கடந்த சில வாரங்களாக வெயில் வாட்டி வதைத்து வந்தது. சில மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேல் கொளுத்தியது.

சென்னையில் நேற்று காலை வழக்கம்போல் வெயில் வாட்டியது. பின்னர் மாலையில் திடீரென வெப்பம் தணிந்து வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டம் கும்மிடிப்பூண்டி, கவரப்பேட்டை, ஆரம்பாக்கம் ஆகிய பகுதிகளில் நேற்று மதியம் சூறாவளி காற்றுடன் பலத்த மழை பெய்தது. பொன்னேரி, கூடுவாஞ்சேரி ஆகிய பகுதிகளில் லேசான மழையும், திருவள்ளூர், பள்ளிப்பட்டு பகுதிகளில் மேகமூட்டத்துடன் சூறாவளி காற்றும் வீசியது.

பலத்த மழை

ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெரும்பள்ளம் பகுதியில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு திடீரென்று சூறாவளிக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. பலத்த சூறாவளிக் காற்று வீசியதால் அப்பகுதியில் 30 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் அடியோடு சாய்ந்து விழுந்து நாசமானது.

அந்தியூரை அடுத்த வட்டக்காடு அருகே உள்ள கிழங்கு பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு சூறாவளிக்காற்றுடன் பெய்த பலத்த மழையில், அங்கு பயிரிடப்பட்டிருந்த 500 வாழை மரங்கள், ½ ஏக்கரில் பயிரிட்டிருந்த மக்காச்சோள பயிர்கள் சாய்ந்தன. பர்கூர் மலைப்பகுதியில் உள்ள தாமரைக்கரை, தேவர்மலை, ஈரெட்டி, மடம் ஆகிய பகுதிகளில் இடியுடன் பலத்த மழை பெய்தது.

மாடு பலி

வேலூர் மாவட்டத்தில் பள்ளிகொண்டா, பொய்கை, செதுவாலை பகுதிகளில் சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. திருவண்ணாமலையில் நேற்று மாலை பலத்த காற்று, இடி, மின்னலுடன் மழை பெய்தது. இதில் திருவண்ணாமலை நகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அருகே நின்ற தென்னை மரத்தில் மின்னல் தாக்கியதில் தீப்பிடித்து எரிந்தது.

வந்தவாசியில் இடி-மின்னலுடன் நேற்று மாலை 20 நிமிடம் நல்ல மழை பெய்தது. மின்னல் தாக்கியதில் மாடு ஒன்று பலியானது.

ஆலங்கட்டி மழை

பெங்களூருவில் கடந்த 3 மாதங்களாக வெயில் சுட்டெரித்தது. வெயிலின் தாக்கத்தால் பெங்களூரு வாசிகள் மிகவும் தவித்து போய் விட்டனர். இந்தநிலையில், நேற்றுமுன்தினம் கனமழை பெய்வதற்கான அறிகுறி தெரிந்தும், லேசான தூறலுடன் மழை ஏமாற்றியது.

அங்கு நேற்று பிற்பகலில் திடீரென சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. பெங்களூரு நகரில் ஒரு சில இடங்களில் ஆலங்கட்டி மழை பெய்தது.

ஊட்டி

ஊட்டியில் நேற்று மதியம் 12 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் 1 மணி நேரம் பெய்த மழையால் ஊட்டி நகரின் பல இடங்களில் குளம்போல் மழைநீர் தேங்கி நின்றது.

கோவை மாவட்டத்தில் கோவை மாநகரம், துடியலூர், மேட்டுப்பாளையம், சரவணம்பட்டி மற்றும் சில இடங்களில் நேற்று மாலை சிறிது நேரம் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

நாமக்கல், ராசிபுரம், பரமத்திவேலூர், அரூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் நேற்று இரவு பலத்த மழை பெய்தது.

**குளச்சலில் நெத்திலி மீன் சீசன் தொடங்கியது**



குளச்சல்,

குளச்சல் மீன்பிடி துறைமுகத்தில் நெத்திலி மீன் சீசன் தொடங்கியது.

மீன்பிடிதொழில்

குளச்சல் மீன்பிடி துறைமுகத்தை தங்குதளமாக கொண்டு ஏராளமான மீனவர்கள் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் வள்ளங்கள், கச்சா வலைகள் மூலம் மீன் பிடித்து வருகிறார்கள்.

தற்போது கடந்த சில தினங்களாக கச்சா வலைகளில் நெத்திலி மீன் பிடிபட தொடங்கியுள்ளது. இதன் மூலம் குளச்சலில் தற்போது நெத்திலி மீன் சீசன் தொடங்கி உள்ளது. கச்சா வலைகளில் பிடிபடும் நெத்திலி மீன்களை மீனவர்கள் கரைக்கு கொண்டு வந்து, வலையை உதறி மீன்களை பிரித்து எடுப்பார்கள்.

ஏலம் விடப்படுகிறது

இவ்வாறு பிரித்து எடுக்கப்படும் மீன்கள் ஏலக்கூடத்திற்கு எடுத்து செல்லப்பட்டு ஏலம் விடப்படுகிறது. அவற்றை உள்ளூர் மற்றும் கேரள மீன்வியாபாரிகள் ஏலம் எடுத்து செல்கிறார்கள்.

இதுகுறித்து, மீனவர் ஒருவர் கூறியதாவது:-

குளச்சல் பகுதியில் தற்போது நெத்திலி மீன் சீசன் தொடங்கியது. தற்போது, பிடிபடும் மீன்களை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கி செல்கிறார்கள். நாட்கள் செல்ல செல்ல இன்னும் அதிக அளவில் நெத்திலி மீன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அவ்வாறு அதிக அளவில் நெத்திலி மீன் கிடைக்கும் போது, அவற்றை பதப்படுத்தி, வெயிலில் உலர்த்தி கருவாடாக மாற்றப்படும். இந்த பணியில் ஏராளமான பெண்கள் ஈடுபடுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

தற்போது குளச்சலில் நெத்திலி மீன் சீசன் தொடங்கியுள்ளதால் மீனவர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கோடைகால பராமரிப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தல்

கோழிகளில் வெப்ப அயற்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த கோடைகால பராமரிப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என ஆராய்ச்சி நிலையம் அறிவுறுத்தி உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 4 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- இன்று முதல் அடுத்த 4

நாட்கள் வானம் அவ்வப்போது மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று 3 மி.மீட்டரும், நாளை 4 மி.மீட்டரும், நாளை மறுநாள் 2 மி.மீட்டரும் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று மணிக்கு 8 கி.மீ. வேகத்தில் தென்கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்பநிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 104 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 82.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 65, 65, 65, 65 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 35, 35 35, 45 சதவீதமாகவும் இருக்கும்.

பராமரிப்பு முறைகள்

கோடை மழைக்கான வாய்ப்பு உள்ளபோதும், பகல் வெப்ப அளவு 104 டிகிரியை ஒட்டியே காணப்படும். காற்றின் வேகம் கூடுதலாகவும், மேகமூட்டம் உயர்ந்தும் காணப்படும் நிலையில் வெப்ப அயற்சியும், வெப்ப அதிர்ச்சியும் சற்றே குறைந்து நிலவும். தென்கிழக்கு திசையில் இருந்து வீசும் ஈரக்காற்றினால் உயரும் வெப்ப அளவுகள் குறைந்து, இதுவரையில் நிலவி வந்த மிக அதிகபட்ச வெப்பமும் அதனைச் சார்ந்த அதிர்ச்சியும் குறையும். இந்த காலகட்டத்தில் கோழிகள் குடிக்கும் தண்ணீரின் அளவு மற்றும் தீவன எடுப்பு சற்றே உயர்ந்து, முட்டை சார்ந்த பிரச்சினைகள் குறையலாம்.

கோழியின நோய் கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் கடந்த வாரம் பரிசோதனை செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல்மூச்சுக்குழாய் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளது தெரியவந்துள்ளது. ஆகவே, பண்ணையாளர்கள் தகுந்த உயிர்ப்பாதுகாப்பு முறைகள் மற்றும் வெப்ப அயற்சியின் தாக்கத்தை கட்டுப்படுத்த கோடைகால பராமரிப்பு முறைகளை கடைபிடிக்க வேண்டும் என்றும், தெளிப்பான் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**தொடர் மழையால் நீலகிரியில் பச்சை தேயிலை விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு**



கூடலூர்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழையின் காரணமாக பச்சை தேயிலை விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு ஏற்பட்டு உள்ளதாக விவசாயிகள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

வறட்சியால் வாடிப்போன தேயிலை செடிகள்

நீலகிரி மாவட்டத்தில் கடந்த மார்ச் மாதம் முதல் கோடை வெயில் சுட்டெரித்து வருகிறது. இதனால் நீர்நிலைகள் வறண்டும், வனப்பகுதிகள் வறட்சியாகவும் உள்ளது. இதனிடையே கடந்த சில வாரங்களாக கோடை வெயிலின் தாக்கம் நாளுக்குநாள் அதிகரித்தது. இதனால் ஆறுகளில் தண்ணீர் இல்லாமல் காய்ந்து விட்டது. மேலும் பல்வேறு இடங்களில் குடிநீர் பற்றாக்குறையும் அதிகரித்து விட்டது.

இதேபோல் நிலத்தின் ஈரத்தன்மை குறைந்து விட்டதால் பச்சை தேயிலை விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டது. மேலும் போதிய நீர்ப்பாசன வசதி இல்லாததாலும், வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டதாலும் பச்சை தேயிலைகள் கருகின.

விளைச்சல் பாதிக்கப்பட்டதால் தேயிலை தொழிற்சாலைகளுக்கு பச்சை தேயிலை வரத்து அடியோடு குறைந்தது. இதனால் பச்சை தேயிலை கிலோவுக்கு ரூ.15 வரை விலை கிடைத்து வந்தது.

விளைச்சல் அதிகரிக்க வாய்ப்பு

தேயிலை தோட்டங்களில் ஏற்பட்ட கடும் வறட்சி காரணமாக விவசாயிகளால் பச்சை தேயிலையை அதிகளவில் உற்பத்தி செய்ய முடியவில்லை. இதனால் பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் தொழிலாளர் குறைப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. இதனால் மாவட்டத்தில் ஏராளமான தொழிலாளர்கள் வேலை இழந்தனர்.

இந்த நிலையில் ஊட்டி, குன்னூர், கூடலூர், பந்தலூர் உள்ளிட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் கோடை வெப்பத்தின் தாக்கம் சற்று குறைந்து உள்ளது.

மேலும் வறட்சியால் வாடிக்கிடந்த தேயிலை செடிகள் துளிர்க்க தொடங்கி உள்ளது. இதனால் பச்சை தேயிலை விளைச்சல் அதிகரிக்கும் என விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

# கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சை உற்பத்தி குறைந்தது



உத்தமபாளையம்,

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு திராட்சையின் உற்பத்தி குறைந்துள்ளது. இதனால் ஒரு கிலோ ரூ.50 என்ற விலையில் வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.

கருப்பு பன்னீர் திராட்சை

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியான காமயகவுண்டன்பட்டி, சுருளிபட்டி, நாராயணத்தேவன்பட்டி, அணைப்பட்டி, ராயப்பன்பட்டி, கூடலூர், அனுமந்தன்பட்டி, க.புதுப்பட்டி, உத்தமபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் நெல், வாழை, தென்னை விவசாயத்திற்கு அடுத்தபடியாக கருப்பு பன்னீர் திராட்சை விவசாயம் சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் பரப்பளவில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டில் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் மட்டுமே ஆண்டு முழுவதும் திராட்சைப்பழம் கிடைக்கும் இடமாக திகழ்கிறது. இந்த பகுதியில் திராட்சை விவசாயத்திற்கு ஏற்ற தட்பவெப்பம் மற்றும் மண்வளம் இருப்பதே இதற்கு காரணமாக உள்ளது. இங்கு விளையும் திராட்சை தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும், கேரள மாநிலத்திற்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது.

ரூ.50-க்கு விற்பனை

இதற்கிடையே கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் தற்போது அனல் காற்று வீசி வருகிறது. இதனால் திராட்சை விளைச்சல் குறைந்துள்ளது. இதன் காரணமாக அவற்றை கொள்முதல் செய்ய வியாபாரிகளிடையே கடும் போட்டி ஏற்பட்டு உள்ளது. இதுகுறித்து அப்பகுதி விவசாயிகள் கூறியதாவது:-

இந்த பகுதியில் தற்போது திராட்சை பழம் வரத்து குறைவால் மொத்த விலையில் ஒரு கிலோ திராட்சை ரூ.50-க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த மாதம் ஒரு கிலோ திராட்சை ரூ.30 முதல் ரூ.35 வரை மட்டுமே விற்பனை செய்யப்பட்டது. தற்போது கிலோவுக்கு ரூ.15 அதிகரித்துள்ளது. கம்பம் பள்ளதாக்கு பகுதியில் ஏப்ரல், மே மாதங்களில் மட்டுமே திராட்சை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு கூடுதல் விலை கிடைக்கும். மற்ற நேரங்களில் ரூ.30-க்கு குறைவான விலையிலேயே வியாபாரிகள் வாங்குவார்கள். இவ்வாறு அவர்கள் கூறினர்.